12ம் வகுப்பு
வரலாறு

அலகு – 8

காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

அறிமுகம்

பிரிவினையின் விளைவுகள்

அரசமைப்பு உருவாக்கம்

சுதேச அரசுகளின் இணைப்பு

மொழி அடிப்படையில் மாநிலங்களின் மறுசீரமைப்பு

இந்திய வெளியுறவுக் கொள்கை

Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

அறிமுகம்

- இந்தியப் பிரிவினை **வங்காளம் மற்றும் பஞ்சாபின்** மாகாணங்களை இரண்டாகப் பிரித்தது.
- **முஸ்லிம்கள்** பெரும்பான்மையாக இருந்த கிராமங்கள் **பாகிஸ்தானுக்கு** எனப் பிரிக்கப்பட்டன;
- **இந்துக்கள்** பெரும்பான்மையாக இருந்த கிராமங்கள் **இந்தியாவோடு** இணைக்கப்பட்டன.
- இந்துக்கள் **கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்காளத்திற்கும்** , இஸ்லாமியர்கள் பீகார் மற்றும் **மேற்கு வங்காளத்தில் இருந்து கிழக்கு வங்காளத்திற்கும்** இடம்பெயர ஆரம்பித்தனர்,
- இதேபோல், மேற்கு பஞ்சாபில் இருந்த **இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் கிழக்கு பஞ்சாபிற்கும்** கிழக்கு பஞ்சாபில் இருந்த முஸ்லிம்கள் **மேற்கு பஞ்சாபிற்கும்** குடிபெயர்ந்தனர்.
- இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் அமைந்த கிராமங்கள் **அவற்றில் வாழ்ந்த பெரும்பான்மை மதத்தினரைப் பொருத்துப்** பிரிக்கப்பட்டன.
- பஞ்சாபில் தனி மத அடையாளம் கொண்டிருந்த சீக்கியர்கள் பாகிஸ்தானின் பகுதியாக அமையவுள்ள கிராமங்களில் வசித்த போதிலும் இந்தியாவோடு இணைந்திருக்க விரும்புவதாக அறிவித்தது

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

இந்தியப் பிரிவினை

❖ இங்கிலாந்து பிரதமர் கிளமண்ட் அட்லி, 1947 பிப்ரவரி 20இல் லண்டனில் வெளியிட்ட அறிவிப்பில் பிரிட்டிஷ் அரசாங்கம் **1948 ஜூன் 30க்குள் இந்தியாவிற்குச் சுதந்திரம்** அளித்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறும் என்று தெரிவித்தார்.

❖ 1947 மார்ச் 22இல் **வேவல் பிரபுவுக்குப் பதிலாக அரச பிரதிநிதியாக பதவிக்கு வந்த மௌண்ட்பேட்டன்** பிரபுவின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அதிகாரம் மாற்றப்படுவதைத் துரிதப்படுத்தின.

❖ **1947 ஜூன் 3இல் மௌண்ட்பேட்டன்** பிரபு, அட்லி அறிவித்த தினத்திற்கு முன்னதாகவே 1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

❖ **வகுப்புவாதப் பிரச்சனை, இருநாடு கோரிக்கை** ஆகியவற்றின் அடிப்படையில் பிரிட்டிஷ் இந்தியாவின் அதிகாரத்தை **இந்தியா – பாகிஸ்தான்** என இரண்டு டொமினியன் அரசாங்கங்களிடம் பகிர்ந்து ஒப்படைப்பதே மௌண்ட்பேட்டன் திட்டமாகும்.

❖ **1947 ஜூன் 14 இல் மீரட்டில்** நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் இந்தியப் பிரிவினையுடன் கூடிய சுதந்திரத்திற்கான மௌண்ட்பேட்டன் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

❖ உருவாக்கிய வகுப்புவாதமும் பிரிவினையும் இந்திய தேசத்தைப் பெரிதும் பாதித்தது. **1948 ஜனவரி 30இல் நிகழ்ந்த மகாத்மா காந்தியடிகளின் படுகொலை** இதன் தொடக்கமாக கருதப்படுகிறது

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

சுதந்திர இந்தியாவின் முன்னின்ற சவால்கள்

- ❖ **பிரிவினையைச்** சமாளித்தல்,
- ❖ **பொருளாதாரத் திட்டமிடல்.**
- ❖ **கல்விமுறையைச் சீரமைத்தல்**
- ❖ **அரசமைப்பை உருவாக்குதல்**,
- ❖ 500க்கும் அதிகமான **சுதேச அரசுகளை** இந்தியாவோடு **ஒருங்கிணைத்தல்,**
- ❖ மக்களால் பேசப்படும் **மொழிகள் அடிப்படையிலான** வேறுபாட்டைத் தீர்த்து வைத்தல்
- ❖ மக்களாட்சி, இறையாண்மை, சகோதரத்துவம் ஆகிய கோட்பாடை கொண்ட **வெளியுறவுக் கொள்கையை** உருவாக்குதல்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

ராட்க்ளிஃப் எல்லை வரையறை



- ❖ இந்திய வரைபடத்தைப் பிரிவினைக்கேற்றவாறு மாற்றி வரைவதற்கு ராட்க்ளிஃப் உருவாக்கிய எல்லை அடிப்படையில் வரையறை செய்யப்பட்டது.
- ❖ **1947 ஆகஸ்ட் 15 க்குப்** பின் இந்தியா – பாகிஸ்தான் என்ற இரண்டு அரசமைப்பு நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டது..
- ❖ பஞ்சாப்-வங்காளம் ஆகிய **இரண்டு எல்லை ஆணையங்களுக்கும் தலைமைப் பொறுப்பு** வகித்தார்.
- ❖ ஆணையத்தில் **முஸ்லிம் சமூகம் மற்றும் இந்து சமூகத்தைச்** சேர்ந்த தலா **இரண்டு நீதியரசர்கள்** இணைந்து பணியாற்றினர்
- ❖ இரண்டு ஆணையங்களும் தங்கள் அறிக்கை **1947 ஆகஸ்ட் 9இல் வெளியிட்டனர்**
- ❖ ராட்க்ளிஃப் எல்லைக்கோட்டின் அடிப்படையில் **எல்லைகளை வரையறுக்கும் பணியைச் சுதந்திரம் வழங்கப்பட்ட பின்** மேற்கொள்ளலாம் என மௌண்ட்பேட்டன் தீர்மானித்தார்.
- ❖ மேற்கு பஞ்சாபின் மக்கள் தொகையில் **நான்கில் ஒரு பங்கு முஸ்லிம்அல்லாதோர்** . ஆவர்.
- ❖ கிழக்கு பஞ்சாப் மக்கள் தொகையின் **மூன்றில் ஒரு பகுதி முஸ்லிம்கள்** ஆவர்
- ❖ ராட்க்ளிஃப் அறிவிப்பு பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தது

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

பிரிவினையின் விளைவுகள்

❖ இந்து - முஸ்லிம் ஒற்றுமை **குலைந்து வகுப்புவாதக் கலவரங்கள் நடைபெற்றது.**

❖ வன்முறையில் உயிரிழந்தோர்களின் **எண்ணிக்கை 2 இலட்சம் முதல் 5 இலட்சம்** என்றும், **15 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர்.**

❖ எல்லையைக் கடப்பதற்காக நின்ற **அகதிகளின் நீண்ட வரிசை கஃபிலா (Kafila) எனப்பட்டது**

❖ 1950, ஏப்ரல் 8இல் **நேரு மற்றும் லியாகத் அலி கான்** கையெழுத்திட்ட **தில்லி ஒப்பந்தம்** இரு தரப்பிலும் உள்ள சிறுபான்மையினரின் நம்பிக்கையை மீட்டெடுப்பது பற்றி குறிப்பிட்டது.

❖ **அரசமைப்பு நிர்ணய சபைக்கும் பிரிவினை பெரும் சவாலாக நின்றது.**

❖ **பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு** அரசமைப்பகவும் **இந்தியா சமயச்சார்பற்ற மக்களாட்சிக் குடியரசு** அரசமைப்பகவும் உருவாக்கியது.

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

அரசமைப்பு உருவாக்கம்



- ❖ இந்தியர்களே தங்களுக்கான அரசமைப்பை உருவாக்குவார்கள் என்ற அடிப்படைக் கருத்து 1922லேயே காந்தியடிகளால் முன்வைக்கப்பட்டது.
- ❖ தன்னாட்சி என்பது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் **இந்தியர்களுக்கு வழங்கப்படும் கொடையாக** இல்லாமல்
- ❖ இந்தியர்களால் சுதந்திரமாக **தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து உருவாக வேண்டும்** என்று காந்தியடிகள் தெரிவித்திருந்தார்
- ❖ இந்திய அரசாங்கச் சட்டம் 1935இன் அடிப்படையில் ஆகஸ்ட் 1946இல் மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது.
- ❖ மாகாண சட்ட மன்றங்கள் **மத்திய சட்டமன்றத்தைத் தேர்ந்தெடுக்க அது அரசமைப்பு நிர்ணய சபையாக** செயல்பட்டது.
- ❖ மாகாண சட்டமன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அரசமைப்பு நிர்ணயசபைக்கான காங்கிரஸ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர்.
- ❖. டாக்டர். **பி.ஆர்.அம்பேத்கர், பம்பாயிலிருந்து அரசமைப்பு நிர்ணயசபைக்கு** தேர்ந்தெடுக்கப்பட்டார்
- ❖ காங்கிரஸ் அவரை **அரசமைப்பு வரைவுக் குழுவின் தலைவராகவும்** தேர்ந்தெடுத்தது.
- ❖ காங்கிரஸ் தலைமைதன் கட்சியின் வல்லுநர்களோடு புகழ்பெற்ற அரசமைப்பு வழக்கறிஞர்களையும் அரசமைப்பு நிர்ணயசபையில் இடம்பெறச் செய்தது

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

அரசமைப்பு நிர்ணயசபை

❖ 1946, **டிசம்பர் 13** அன்று **ஜவகர்லால் நேரு** இந்திய அரசமைப்புக்கான **குறிக்கோள் தீர்மானத்தை** அரசமைப்பு நிர்ணய சபையில் **அறிமுகப்படுத்தினார்**.

❖ அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் **1946 டிசம்பர் 9** இல் நடைபெற்றது.

❖ **இராஜேந்திர பிரசாத்** அரசமைப்பு நிர்ணய சபைக்கு **தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ **டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர்** அரசமைப்பு நிர்ணயசபைக்கு **வரைவுக் குழுவின் தலைவராகவும்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள்



- ❖ குடிமக்களுக்கு **அடிப்படை உரிமைகளையும்**
- ❖ அரசு கொள்கைகளுக்கான **வழிகாட்டு நெறிமுறைகள்**
- ❖ இந்திய நாட்டிற்குச் **சுதந்திரமான தேர்தல் ஆணையம்.**
- ❖ **வயதுவந்தோர்** அனைவருக்குமான **வாக்குரிமை.**
- ❖ மக்கள் பிரதிநிதிகளுக்குச் **சட்டம் இயற்றுவதில் இறையாண்மையை** உறுதிபடுத்தியது .
- ❖ **நீதித்துறையின் சுதந்திரத் தன்மையையும்** உறுதி செய்தது.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

அடிப்படை உரிமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்



- ❖ அடிப்படை உரிமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்.
- ❖ இந்திய அரசமைப்பு **1949 நவம்பர் 26இல்** அரசமைப்பு நிர்ணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ **அடிப்படை உரிமைகள் குறிக்கோள்** தீர்மானத்தின் **ஐந்தாம் பிரிவிலிருந்து** உருவாக்கப்பட்டன.
- ❖ **இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி** கூட்டத்தில் பட்டியலிடப்பட்ட **உரிமைகளும்**, இதற்கு மூலங்களாய் அமைந்தன
- ❖. இந்திய அரசமைப்பின் **உணர்வ சுதந்திரப் போரின் அனுபவத்திலிருந்து** பெறப்பட்டதாகும்.
- ❖ அரசைமைப்பின் **சட்டமொழி குறிக்கோள் தீர்மானத்திலிருந்து** பெறப்பட்டதாகும்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபை **1948 டிசம்பர் 10இல் வெளியிட்ட அனைத்துலக மனித உரிமைகள் பேரறிக்கையிலிருந்தும்** எடுக்கப்பட்டது.

Padasalai.Net

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

சுதேச அரசுகளின் இணைப்பு



- சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி **1947 ஆகஸ்ட் 15** க்குள் விரைவாக முடிக்கப்பட்டது.
- **காஷ்மீர், ஜூனாகத், ஹைதராபாத்** ஆகியவற்றைத் **தவிர** மற்ற சுதேசஅரசுகள் அனைத்தும் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டன.
- சுதேசஅரசுகள் **பாதுகாப்பு, வெளியுறவு** மற்றும் **தகவல் தொடர்பில்** இந்தியாவின் **மைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன**.
- இந்திய **இணைய மறுக்கும் மாநிலங்கள்** இந்திய ஒன்றியத்தின் **எதிரியாகக் கருதப்படும்** என்ற அச்சுறுத்தலான அறிவிப்பை வெளியிட்டது
- அறிவிப்பு பல சுதேசஅரசுகள் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டு இந்தியாவோடு இணைக்கப் காரணமான அமைந்தது.
- இந்திய ஒன்றியத்தோடு இணையும் **சுதேச மன்னர்களுக்குத் தாராளமாக மன்னர் மானியங்களும்** வழங்கப்பட்டன.
- **சுதேசஅரசுகளை இந்தியாவோடு நிறைவாக இணைக்கும் பணியை** உள்துறை அமைச்சராக இருந்த **சர்தார் வல்லபாய் படேல்** திறம்பட செய்து முடித்தார்.

இணைப்புறுதி ஆவணம்


Government of India Act, 1935.

[26 Geo. 5. Ch. 2.]

SUPPLIED FOR THE PUBLIC SERVICE

ARRANGEMENT OF SECTIONS. A.D. 1935.

PART I.

INTRODUCTORY.

Section.

1. Short title.
2. Government of India by the Crown.
3. The Governor-General of India and His Majesty's Representative as regards relations with Indian States.
4. The Commander-in-Chief in India.

PART II



- ❖ இந்திய அரசாங்கச் சட்டம் 1935 **கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான ஆவணம்** ஆகும்.
- ❖ இந்த ஆவணமே **இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின் போது பயன்படுத்திக்** கொள்ளப்பட்டது.
- ❖ இந்திய சுதேச அரசர்கள், இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய **ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கான ஒப்பந்தமாகவும்** பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

www.Padasalai.Net www.CBSEtips.in

சுதேச அரசுகளின் இணைப்பில் முக்கியப் பங்கு வகித்த போராட்டங்கள்

❖ சுதேச அரசுகளின் இணைப்பில் முக்கியப் பங்கு வகித்த போராட்டங்களாக மூன்று போராட்டங்களைக் குறிப்பிடலாம்.

1) திருவாங்கூர் மாநிலத்தின் பொறுப்பரசாங்கம் வேண்டி அந்த மாநிலத்தின் திவான் **சி.பி. இராமசாமியை** எதிர்த்து நடத்தப்பட்ட **புன்னப்புரா – வயலார் ஆயுதப் போராட்டம்** முக்கியமானது.

2) இன்னொரு முக்கியமான போராட்டம் **பிரஜா மண்டல் மற்றும் ஒடிசாவில் நடந்த பழங்குடியினர் கிளர்ச்சிகள்** (நீலகிரி, தெங்கனால் மற்றும் தல்சர்) இந்தியாவில் நடந்த இரண்டாவது முக்கிய சுதேச எதிர்ப்புப் போராட்டம் ஆகும்.

3) **மைசூர் மகாராஜாவிற்கு எதிராக இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய போராட்டங்களும்** இந்திய சுதேச அரசுகளின் இணைப்புக்கு முக்கியப் பங்காற்றின.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

சுதேச அரசுகளை இந்தியாவோடு ஒருங்கிணைத்தல்



- ❖ 500க்கும் அதிகமான எண்ணிக்கையில் வெவ்வேறு பரப்பளவில் இருந்த சுதேச அரசுகளை இந்தியாவோடு ஒருங்கிணைத்தல்
- ❖ **காஷ்மீர், ஜுனாகத், ஹைதராபாத்** ஆகியவற்றைத் தவிர மற்ற சுதேசஅரசுகள் அனைத்தும் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டன
- ❖ ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, அவர் **ஹைதராபாத் அரசை சுதந்திர அரசு** என்று அறிவித்தார்.
- ❖ ஜுனாகத் அரசர் மக்கள் **விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர** விரும்பினார்.
- ❖ இதே போல், காஷ்மீரின் இந்து அரசரான மகாராஜா ஹரிசிங் **காஷ்மீர் சுதந்திர அரசாக** இருக்குமென்று அறிவித்தார்
- ❖ அந்நாட்டு மக்கள் தேசிய மாநாட்டுத் தலைமையில் 'காஷ்மீரைவிட்டு வெளியேறுங்கள்' போராட்டத்தை அரசருக்கெதிராக தொடங்கினர்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

ஹைதராபாத் இணைப்பு





- ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்தார்.
- விடுதலைப் பிரகடனம் செய்த 48 **மணிநேரத்திற்குள் இந்தியா காவல்துறை நடவடிக்கைகளைத்** தொடர்ந்தது.
- ஹைதராபாத் நிஜாம் மற்றும் அவரது **இராணுவமான இரசாக்கர்கள் மீது தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.**
- தெலங்கானா **மக்கள் இயக்கத்தை கம்யூனிஸ்டுகள் வழிநடத்தினர் .**
- இதன் காரணமாக ஹைதராபாத் மீது **காவல்துறை சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு** காரணம அமைந்தது

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

காஷ்மீர் இணைப்பு

The Hindustan Times

KASHMIR ACCEDES TO INDIA

PLEBISCITE SOON ON RULER'S DECISION

SHEIKH ABDULLA TO FORM INTERIM GOVT.

UNION TROOPS RUSHED FOR PROTECTION OF STATE

- ❖1946 முதலே படேல் காஷ்மீர் மகாராஜாவோடு பேச்சுவார்த்தை நடத்தினார்,
- ❖ காஷ்மீர் அரசர் **ஹரிசிங் இந்தியாவோடு இணைய மறுத்து** வந்தார்
- ❖.இந்திய விடுதலைக்குச் சில மாதங்களுக்குப் பின் (அக்டோபர் 1947) **பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடினர்**.
- ❖ மகாராஜா ஹரிசிங்கால் அந்த **நடவடிக்கையைத் தடுக்க முடியவில்லை**.
- ❖இந்திய இராணுவம் அனுப்பப்படுவதற்கு முன் **காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும்** என படேல் உறுதியாக இருந்தார்
- ❖கையெழுத்திடதன் விளைவாக **காஷ்மீர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியானது**.
- ❖தலைவர்கள் காஷ்மீர் மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளும், காஷ்மீர் மக்கள் மீதான அக்கறை.
- ❖ ஜம்மு காஷ்மீருக்கு இந்திய அரசமைப்பின் **உறுப்பு 370இன் படி தனி அந்தஸ்து வழங்கக் காரணமாயின**

www.Padasalai.Net www.CBSEtips.in

மொழி அடிப்படையில் மாநிலங்களின் மறுசீரமைப்பு

❖ விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவின் உருவாக்கத்தில் முக்கியமானது **மொழிவாரியாக மாநிலங்களை மறுசீரமைப்பு** ஆகும்.

❖ இந்திய அரசமைப்பு நிர்ணய சபையின் **1947 மற்றும் 1949 இடைப்பட்ட ஆண்டுகளில்** விவாதிக்கப்பட்டது.

❖ அரசமைப்பு நிர்ணய சபை இது குறித்த விவாதத்தை இரண்டு காரணங்களுக்காக நிலுவையில் வைத்தது.

1) **மொழிவாரி மாநில மறுசீரமைப்பானது பெரும்பணி** என்பது முதற் காரணம்,
2) **இந்தியப் பிரிவினையும் அது தொடர்பான பிரச்சினைகளை உருவாக்கும்** என்பது இன்னொரு காரணம்.

❖ 1956இல் ஆந்திரப் பிரதேச உருவாக்கத்தில் தொடங்கி 1966இல் முற்றுப் பெற்றது

❖ பஞ்சாப் மாநிலத்தைப் **பஞ்சாப்** மாநிலம் மற்றும் அதிலிருந்து பிரிக்கப்பட்ட **ஹரியானா** மற்றும் **இமாச்சலப்பிரதேச** மாநிலங்கள் என மூன்றாகப் பிரித்ததில் முற்றுப் பெற்றது

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

1920 - 1956 மொழிவாரி மாநிலக் கோரிக்கை பல்வேறு நிலைகள்

- 1920ஆம் ஆண்டு முதலே **இந்திய விடுதலை இயக்கத்தோடு, மொழிவாரி மாநிலக் கோரிக்கை** ஒன்றிணைந்திருந்தது
- இந்திய தேசிய காங்கிரஸ் (1920ஆம் ஆண்டு) **நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் மொழி வாரியான மாகாண** காங்கிரஸ் குழுக்கள் அமைக்கப்படுவதன் மூலம் **மொழி அடையாளத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அடையாளம் பாதுகாக்கப்படும்** என்று உறுதியளித்தது.
- 1928இல் வெளியான நேரு அறிக்கை பிரிவு 86 இல். "**நிதி மற்றும் நிர்வாக காரணங்களுக்கு உட்பட்டு, பெரும்பான்மை மக்கள் வாழும் இட அடிப்படையில் மாநிலங்களை மொழி வாரியாக மறு சீரமைப்பதற்கான கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்**"
- 945ஆம் ஆண்டு மாகாண மற்றும் மத்திய சட்டமன்றங்களுக்கு நடைபெற்ற **தேர்தலின்போது இந்திய தேசிய காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாணங்கள் பற்றிய கருத்து ஆணித்தரமாக இடம் பெற்றிருந்தது.**
- 1946 ஆகஸ்ட் 31இல் **பட்டாபி சீதாராமைய்யா ஆந்திரா மாகாணத்திற்கான கோரிக்கையை** அரசமைப்பு நிர்ணயசபையின் முன் வைத்தார்.
- "**இந்த முழுப்பிரச்சனையை முதல் பிரச்சனையாகவும், முக்கியப் பிரச்சனையாகவும் எடுத்து அரசமைப்பு நிர்ணய சபை தீர்வு காண வேண்டும்**" என்று அவர் குறிப்பிட்டார்.
- , **1946, டிசம்பர் 8** இல் ஒரு மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தில் **மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கையை அரசமைப்பு நிர்ணயசபை ஏற்றுக்கொள்ள வேண்டும்** என்று வலியுறுத்தினார்
- புதிய அரசமைப்பில் **சிந்து, ஒரிசா (ஒடிசா) மாகாணங்கள் போல ஆந்திராவும் தனி அலகாகக் குறிப்பிடப்படும்** என்று தெரிவித்ததோடு இந்திய அரசாங்கச் சட்டம் 1935- ல் இடம்பெற்றது.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

1948, மொழிவாரி மாகாண(மூவர்)ஆணையம்

- 1948, ஜூன் 17இல் அரசமைப்பு நிர்ணயசபைத் தலைவர் **இராஜேந்திர பிரசாத் மூவர் ஆணையம்** ஒன்றை அமைத்தார்.
- புதிய மொழிவாரி மாகாணங்களாக **ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம்** ஆகியவற்றை உருவாக்குவது குறித்து ஆராய்ந்தது.
- **1948 டிசம்பர் 10** சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மொழிவாரி மாகாண மறுசீரமைப்பு கருத்தாக்கத்திற்கு எதிரான காரணங்களைப் பட்டியலிட்டது.
- முன்மொழியப்பட்ட **ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம்** ஆகியவற்றை **உருவாக்குவதற்கு எதிரான கருத்துக்களை** ஆணையம் எடுத்துரைத்தது.
- எனினும், மொழிவாரி மாகாணக் கோரிக்கை நின்றுவிடவில்லை.
- ஜெய்ப்பூர் மாநாட்டில் **பட்டாபி சீதாராமையா தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்ட பின் இந்தக் கோரிக்கை மேலும் **முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது.**
- மொழிவாரி மாகாணக் கோரிக்கையை **ஆராய ஜவகர்லால் நேரு, வல்லபாய் படேல் மற்றும் பட்டாபி சீதாராமையா** ஆகிய மூவரையும் கொண்ட ஜே. வி.பி. குழு (J. V. P. Committee) அமைக்கப்பட்டது.

Padasalai.Net

1949 - ஜே.வி.பி. குழு

- ஜே.வி.பி. குழு தனது அறிக்கையை 1949 ஏப்ரல் 1 இல் சமர்ப்பித்தது.
- துரதிருஷ்டவசமாக இக் குழுவும் மொழிவாரி மாகாண ஆணையத்தின் முடிவையே ஆதரித்தது.
- இந்தக் குழு மொழிவாரி மாகாணங்கள் "குறுகிய பிராந்தியவாதத்தை" வலியுறுத்துகின்றன என்றும், அது நாட்டின் மேம்பாட்டிற்கு "அச்சுறுத்தலாக" உருவாகக்கூடும் என்றும் தெரிவித்தது.
- ஜே.வி.பி. குழு "மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று குறிப்பிட்டது
- ஜே.வி.பி. குழு தனது அறிக்கையின் முடிவுரையில் மொழிவாரி மாநில மறுசீரமைப்பிற்கு அது உகந்த நேரமல்ல என்று தெரிவித்தது
- .மொழிவாரி மாநிலம் மறுசீரமைப்பிற்கான ஒருமித்தக் கருத்தை உருவாக்கும் பணி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

1955 - மாநில மறுசீரமைப்பு ஆணையம்





- முதல் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் மீண்டும் மொழிவாரி மாநில கருத்தாக்கம் எழுச்சிபெற்றது.
- ஆந்திரா தனி மாநிலமாகப இதன் காரணமாக **பசல் அலியைத் தலைவராகவும், கே.எம்.பணிக்கர் மற்றும் எச்.என். குன்ஸ்ரூ** ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட **மாநில மறுசீரமைப்பு ஆணையம்** அமைக்கப்பட்டது.
- இந்த ஆணையம் தனது அறிக்கையை 1955 அக்டோபரில் சமர்ப்பித்தது. இந்த ஆணையம் **16 மாநிலங்களையும் 6 இந்திய யூனியன்** என்று வரையறுத்தது.
- மதராஸ், கேரளம், கர்நாடகம், ஹைதராபாத், ஆந்திரம், பம்பாய், விதர்பா, மத்தியபிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், ஒரிசா (ஒடிசா), ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகியவையாகும்.
- ஆணையத்தின் பரிந்துரைகள் **நிர்வாகக் காரணங்கள் மற்றும் மொழிவாரி மாகாண கோரிக்கைகள்** ஆகியவற்றிற்கிடையேயான **சமாதான நடவடிக்கைகளாக** அமைந்தன.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

மொழிவாரி மாநில மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தல்



- ❖ மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கை, மாநில மறுசீரமைப்புச் சட்டமாக **1956இல் நிறைவேற்றப்பட்டு** நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ❖ ***ஹைதராபாத்தை*** உள்ளடக்கிய **ஆந்திரபிரதேசம்** உருவானது.
- ❖ ***திருவாங்கூர், கொச்சின்*** அரசு மற்றும் மதராஸ் மாநிலத்தின் ***மலபார்*** மாவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி **கேரளம்** உருவானது.
- ❖ ***மைசூர் அரசு*** மற்றும் ***பம்பாய், மதராஸ்*** மாநிலத்தின் பகுதிகளை உள்ளடக்கி **கர்நாடகம்** உருவானது.
- ❖ அனைத்திலும் மொழி அடையாளமே மையக் கருத்தாக அமைந்தது.
- ❖ குஜராத்தி மொழி பேசும் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மே 1960இல் ***மகாராஷ்டிராவிலிருந்து குஜராத்*** மாநிலம் உருவாக்கப்பட்டது.
- ❖ 1966இல் பஞ்சாப் மாகாணம் **பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம்** என 3 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
- ❖ இதன் மூலம் 1920இல் இந்திய தேசிய காங்கிரசால் தொடங்கப்பட்ட மொழிவாரி மாகாண சீரமைப்பு முடிவுக்கு வந்தது.

Padasalai

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

இந்திய வெளியுறவுக் கொள்கை



- ஜவகர்லால் நேருவே **இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மை சிற்பி** ஆவார்
- இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

1) **காலனிய எதிர்ப்பு (அ) ஏகாதிபத்திய எதிர்ப்பு,**
2) **இன ஒதுக்கலை எதிர்த்தல்,**
3) **இனவெறியை எதிர்த்தல்,**
4) **வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை,**
5) **ஆப்பிரிக்கஆசிய ஒற்றுமை, பிறநாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்,**
6) **பிறநாடுகளின் உள்நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்,**
7) **ஒரு நாடு மற்றொரு நாட்டின் இறையாண்மை** மற்றும் **நில எல்லையை மதித்தல்,**
8) **உலக அமைதி** மற்றும் **பாதுகாப்பை மேம்படுத்துதல்,**

- நாடுகளுக்கிடையேயான அமைதியை நிலைநிறுத்துவதில் வெற்றிடம் ஏற்படா வண்ணம் இரு நாடுகளும் சமநீதியைப் பாதுகாத்தல்.

www.Padasalai.Net www.CBSEtips.in

இந்தியா - சீனா உறவு

- 1949இல் சீனா ஜப்பானியக் காலனிய விரிவாக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.
- இந்தியா, **சீனாவோடு நீண்ட எல்லையைக் கொண்டிருந்ததால்** நேரு சீனாவுடனான நட்புறவுக்கு அதிக முக்கியத்துவம் தந்தார்.
- **சீன மக்கள் குடியரசை 1950 ஜனவரி 1இல் முதன் முதலாக அங்கீகரித்த** நாடு இந்தியா.
- காலனி ஆதிக்கத்தால் பெற்ற துன்பம், அதன் விளைவுகளான வறுமை மற்றும் பின்தங்கிய வளர்ச்சி ஆகிய அனுபவ ஒற்றுமைகளின் காரணமாக இந்தியாவும் சீனாவும் கைகோர்த்து.
- **ஐ.நா** பாதுகாப்பு அவை **கம்யூனிச சீனாவை உறுப்பினராக** ஏற்க வேண்டுமென்று நேரு வலியுறுத்தினார்.
- 1950இல் சீனா, திபெத்தை ஆக்கிரமித்த போது இந்தியா வருத்தமடைந்தது.
- இந்தியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் சீனா நடந்துகொள்ளவில்லை என இந்தியா கருதியது
- 1954இல் இந்தியா மற்றும் சீனாவிடையே கையெழுத்தான ஒப்பந்தம் **சீனாவிற்கு திபெத் மீதிருந்த உரிமையை** அங்கீகரித்தது.
- அத்தோடு இந்திய சீன உறவுக்கான கோட்பாடுகளாகப் பஞ்சசீலக் கொள்கையை வகுத்தது.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகள்

Panchsheel Treaty

The Five Principles of Panchsheel, which formed the core of Sino–Indian Agreement 1954, are as below:

1. mutual respect for each other's territorial integrity and sovereignty,
2. mutual non-aggression,
3. mutual non-interference in each other's internal affairs,
4. equality and mutual benefit, and
5. peaceful co-existing.

❖ பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகள்

1) நில எல்லை மற்றும் **இறையாண்மையை மதித்து நடத்தல்.**

2) இரு நாடுகளும் **ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.**

3) ஒரு நாடு மற்றொரு நாட்டின் **உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.**

4) இரு நாடுகளுக்கு இடையேயான **சமத்துவம் மற்றும் ஒன்றுக்கொன்று பயனடைவதற்கான கூட்டுறவு.**

5) **சமாதான சகவாழ்வு**

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

இந்தியா - சீனா உறவில் ஏற்பட்ட பின்னடைவு

- ❖1959இல் சீன அரசாங்கம் பௌத்தர்களின் கிளர்ச்சியை ஒடுக்கியது
- ❖ பௌத்தர்களின் தலைவரான தலாய்லாமா ஆயிரக்கணக்கான அகதிகளுடன் திபெத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.
- ❖இந்தியா, **தலாய்லாமா-விற்கு தஞ்சம் வழங்கியது** சீனாவை வருத்தமடையச் செய்தது
- ❖அக்டோபர் **1959இல் லடாக்கில் இருந்த கொங்காய் கணவாயில்** காவல் இருந்த இந்தியப் படை மீது சீனா தாக்குதல் நடத்தியது
- ❖5 இந்தியக் காவலர்கள் கொல்லப்பட்டனர், 12 பேர் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்;
- ❖பலகட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றபோதிலும் இந்திய- சீன உறவில் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை. **1962இல் இந்திய சீனப் போர்** ஏற்பட்டது.
- ❖**1962, செப்டம்பர்** 8 இல் சீனப் படைகள் **தக்லா மலைப்** பகுதியில் தாக்குதல் நடத்தின.
- ❖இதன் விளைவாக, இந்தியா சீனாவோடு இணைந்து ஆசிய மண்டலத்தை உருவாக்கும் கனவு தகர்ந்து போனது.

www.Padasalai.Net www.CBSEtips.in

அணி சேரா இயக்கத்தின் தோற்றம்

- ❖ **1947இல் டெல்லியில் நேரு** ஏற்பாடு செய்த **ஆசிய உறவுக்கான மாநாட்டில்** 20க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொண்டன.
- ❖ ஆசிய நாடுகளின் விடுதலை மற்றும் உலகில் ஆசியாவின் நிலையை உறுதி செய்தல் என்பதே மாநாட்டின் மையக் கருத்தாகும்.
- ❖ டிசம்பர் 1948இல் இந்தோனேசியாவில் மறு காலனியாக்கத்திற்கு உட்படுத்த விரும்பிய, டச்சுக்காரர்களுக்குப் பதில் கூறும் வகையில் நடத்தப்பட்டது.
- ❖ காலனி ஆதிக்க நீக்க முயற்சிகள் 1954இல் கொழும்பில் நடைபெற்ற ஆசியத் தலைவர்கள் மாநாட்டில் மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.
- ❖ இந்த முயற்சிகளுக்கு **1955இல் இந்தோனேசியா நாட்டின் பாண்டுங் நகரில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் மாநாடு** நடைபெற்றது.
- ❖ சில ஆண்டுகளுக்குப் பின் பெல்கிரேட் நகரில் இந்த நாடுகள் கூடி அணி சேரா இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தை பாண்டுங் மாநாடு ஏற்படுத்திக் கொடுத்தது.
- ❖ சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் சிற்பி ஜவகர்லால்நேரு,
- ❖ எகிப்து அதிபர் நாசர் மற்றும் யூகோஸ்லாவியாவின் டிட்டோ ஆகியோருடன் இணைந்து 1961இல் அணுசக்தி ஆயுதக்குறைப்பு மற்றும் சமாதானத்திற்கான அழைப்பு விடுத்தார்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

கற்றல் விளைவுகள்

பிரிவினையின் சவால்கள்

அரசமைப்பு உருவாக்கம்

செயல்முறையும் உணர்வும் இந்திய ஒன்றியத்தில் சுதேச அரசுகளை ஒருங்கிணைத்தல்

மொழி அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைத்தல்

அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள்

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

க.சுந்தரமூர்த்தி ,

அரசு மேல்நிலைப்பள்ளி வடஇலுப்பை,

திருவண்ணாமலை மாவட்டம் 632511.

Padasalai.Net